2018 ஜனவரி 9]

குறிப்பிடுகின்ற Taluk/Non–taluk *மருத்துவமனைகளிலும் நியமனம் செய்துகொண்டிருக்கின்றோம். எனவே, நீங்கள் குறிப்பிடுகின்ற மருத்துவமனையிலும் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

மலர் விற்பனைக் கூடம்

***11588—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் நகரில் மலர் விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, செங்கம் நகரில் மலர் விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மலர்கள் உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் நிரம்ப இருக்கின்ற தொகுதி செங்கம் தொகுதி. அருகில் இருக்கின்ற தண்டராம்பட்டு, கலசப்பாக்கம், புதுப்பாளையம் மற்றும் பிற பகுதிகளில் பல இலட்சம் ஏக்கரில் மலர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்த மலர்கள் செங்கம் மற்றும்*

திருவண்ணாமலை பகுதிகளிலிருந்து இடைத்தரகர்களால் வாங்கப்பட்டு, பெங்களூருக்கு எடுத்துச் சென்று, பின்னர் அங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றார்கள். இதில் விவசாயிகள் பெரும் அளவில் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே, அங்கே உடனடியாக ஒரு மலர் விற்பனைக் கூடத்தை அமைத்து விவசாயிகளின் நலனைக் காக்க இந்த அரசு முன்வருமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் வட்டாரத்தில் மல்லி, முல்லை, சாமந்தி, கோழிக்கொண்டை, சம்பங்கி போன்ற மலர்கள் 253.67 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றன. இதன் மொத்த உற்பத்தி 365.44 மெட்ரிக் டன் ஆகும். இங்கு காலையில் பறிக்கப்படுகின்ற மலர்கள் திருவண்ணாமலை மற்றும் பெங்களூரில் உள்ள வியாபாரிகளிடம் ஒப்பந்த அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன. மாலையில் பறிக்கப்படும் மலர்கள் உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யப்பட்டுவிடுவதால், விற்பனை உபரி எதுவும் இப்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, செங்கம் பகுதியில் மலர் விற்பனைக் கூடம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் தற்போது ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலர்கள் எல்லாம் ஒப்பந்த அடிப்படையில் பெங்களூருக்கு அனுப்பப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டார்கள். எனவே அங்கே கட்டாயம் குளிர்பதன வசதியுடன் கூடிய ஒரு மலர் விற்பனைக் கூடத்தை இந்த அரசு அமைத்துத் தர வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 ஜனவரி 9]

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் ஒப்படைப்பேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

10—

திருப்பணி

***4467—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டிலுள்ள வாய்க்கால் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்துக் கொடுத்த பாதையில் சிதறாமல், சிந்தாமல் ஆட்சிப் பணியை செய்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி என் பதிலுரையைத் தொடங்குகின்றேன்.*

முற்பகல் 11–15

ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகரில் வாய்க்கால் அருள்மிகு காரை மாரியம்மன் திருக்கோயிலுக்கு கடந்த 10–2–2006 அன்று திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திருக்கோயிலின் தொன்மை மாறாமல் திருப்பணி செய்ய ஏதுவாக, தொல்லியல் துறையிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், இத்திருக்கோயில் திருப்பணிக்கான பணிகளைச்